<u>கொடைக்கானல் நகராட்சி</u>

1920 ஆம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் விதி 2(2)ன் கீழ் 24.06.2022ஆம் நாள் வெள்ளிக்கிழமை மதியம் 1.00 மணிக்கு நகர்மன்றத்தின் அவசரக்கூட்டம் நகர்மன்றக் கூடத்தில் நடைபெறும் அது சமயம் அனைத்து நகர்மன்ற உறுப்பினர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

ஒம்/—பா.செல்லத்துரை,
நகர்மன்றத் தலைவர்,
கொடைக்கானல் நகராட்சி.

நாள். 24.06.2022

**பொருள் எண். 1)**

கொடைக்கானல் நகராட்சி பகுதியில் நகர்மன்றத் தீர்மானம் எண். 7 நாள். 11.04.2022 ன் படி, குடிநீர் நிதியின் கீழ் பணிகள் மேற்கொள்வதற்கு 29.04.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பீட்டு அட்டவணை மன்றத்தின் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு இலட்சத்தில் | ஒப்பந்தக்காரரின் பெயர் ( திருவாளர்கள் ) | ஒப்பந்த சதவீதம் (மதிப்பீடு விகிதத்திற்கு ) |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | கொடைக்கானல் நகராட்சி பகுதியில் சீரான குடிநீர் விநியோகம் செய்ய நகர் பகுதிகளில் உள்ள குடிநீர் ஆழ்துளை கிணறுகள் மின்மோட்டார், பேனல் போர்டு வருடாந்திர பணி செய்தல் | 9.50 | எம்.கென்னடி<br>பி. சுப்பிரமணி | 0.10% குறைவு<br>0.32% அதிகம் |

அலுவலக குறிப்பு. 1) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.
2) குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

| | |
|---|---|
| **<u>நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :</u>** | **100, நாள்.24.06.2022** |
| | |
| **<u>நகர்மன்றத் தீர்மானம்</u>** : | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண். 2)**

கொடைக்கானல் நகராட்சி பகுதியில் நகர்மன்றத் தீர்மானம் எண். 9 நாள். 11.04.2022 ன் படி, குடிநீர் நிதியின் கீழ் பணிகள் மேற்கொள்வதற்கு 29.04.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பீட்டு அட்டவணை மன்றத்தின் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு இலட்சத்தில் | ஒப்பந்தக்காரரின் பெயர் ( திருவாளர்கள் ) | ஒப்பந்த சதவீதம் (மதிப்பீடு விகிதத்திற்கு ) |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | கொடைக்கானல் நகராட்சி பகுதியில் உள்ள குடிநீர் விநியோக குழாய்கள் மற்றும் வால்வுகள் பழுது சரி செய்தல் மற்றும் வருடாந்திர பராமரிப்பு பணி | 10.00 | எம். கென்னடி<br>பி. சுப்பிரமணி | 0.13 %குறைவு<br>0.55 %அதிகம் |

அலுவலக குறிப்பு. 1) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஓப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

2) குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **101, நாள்.24.06.2022** |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம்** : | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண்.** 3)

அரசாணை (நிலை) எண்.166, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி.IV) துறை, நைள்.23.11.2016—ன்படி, கொடைக்கானல் நகர்புற உள்ளாட்சி அமைப்புகளின் எல்லைக்குட்பட்ட அரசு பள்ளிகள் / உள்ளாட்சி நிறுவன பள்ளிகளில் உள்ள கழிப்பறைகளை தனியார் வசம் ஒப்படைத்து பராமரிக்கவும், அதற்கான செலவினத்தினை கல்வி நிதியிலிருந்து செலவிடவும், மேலும் தனியார் நிறுவனங்களை தேர்வு செய்தல், தொடர்ச்சியாக சுத்தம் செய்தல் மற்றும் சுத்தம் செய்வதற்கான பொருட்களை வாங்குதல் தொடர்பான வழிகாட்டு நெறிமுறைகளும் அரசாணையில் வெளியிடப்பட்டுள்ளது.

மேற்காணும் விபரங்களின் அடிப்படையில், ஒப்பந்த அடிப்படையில் வெளிக் கொணர்வு முகமை நிறுவனம் தேவையான துப்புரவு பணியாளர்களை சப்ளை செய்ய வேண்டும். தேவையான அனைத்து துப்புரவு பொருட்களும் (பக்கெட், மக்கு, கையுறைகள், துடைப்பான் கம்பு, பிளீச்சிங் பவுடர் மற்றும் இதர பொருட்கள்) ஒப்பந்ததாரரான நிறுவனமே விநியோகம் செய்து பணிகள் மேற்கொள்ளவும், சம்மந்தப்பட்ட பள்ளி தலைமை ஆசிரியர் திருப்தியாக உள்ளது என கடிதம் பெற்ற பின்னரே செலவினம் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.21787/2021/EA2, நாள்.02.10.2021ன்படி, நகராட்சியில் போதுமான தூய்மை பணியாளர்கள் இல்லததால் வெளிக்கொணர்வு முகமை மூலம் பணியமர்த்தப்படும் பணியாளர்களுக்கென ஊதியம் நாள் ஒன்றுக்கு ரூ.391/— என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

மேற்கண்ட சுற்றறிக்கையின்படி, இந்நகராட்சி துப்புரவுப் பணிகளை தனியார் நிறுவனம் மூலம் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள தரவிலை விகிதப்படி ஒப்பந்த அடிப்படையில் கீழ்காணும் பள்ளிகளுக்கு மூன்று மாதங்களுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரி துப்புரவுப் பணியாளர்களை கொண்டு பணிகள் மேற்கொள்ளவும், அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.6,00,000/— (ரூபாய் ஆறு இலட்சம் மட்டும்) ற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | பள்ளியின் பெயர் | தேவைப்படும் துப்புரவுப்பணியாளர்கள் | |
|---|---|---|---|
| | | ஆண் | பெண் |
| 1) | நகராட்சி தொடக்கப்பள்ளி, அப்ஸர்வேட்டரி, கொடைக்கானல். | 1 | 1 |
| 2) | நகராட்சி தொடக்கப்பள்ளி, சீனிவாசபுரம், கொடைக்கானல். | 1 | 1 |
| 3) | நகராட்சி தொடக்கப்பள்ளி, ஆனந்தகிரி, கொடைக்கானல். | 2 | 1 |
| 4) | அரசு மேல்நிலைப் பள்ளி, கொடைக்கானல். | 3 | 2 |
| 5) | நான்கு பள்ளிகளுக்கும் பணி மேற்பார்வையாளர் | 1 | |
| | மொத்தம் | 8 | 5 |

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **102, நாள்.24.06.2022** |
|---|---|
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண். 4)**

கொடைக்கானல் நகராட்சி பொது சுகாதாரம், இந்நகராட்சிக்கு உட்பட்ட 24 வார்டுகளில் சேகரமாகும் திடக்கழிவுகளை விரைவில் உரமாக்க உபயோகப்படுத்தப்படும் EM Solution, Effective Micro Organisam, மரு பயன்பாடு செய்யக்கூடிய கையுறைகள் 500 ஜோடி எண்ணிக்கையும் ஒரு முறை மட்டும் பயன்படுத்தும் கையுறைகள் (500 பெட்டிகள்) 5000 எண்ணிக்கையில் வாங்கிக் கொள்வதற்கும் மற்றும் கிருமி நாசினி லைசால் (Lysol) கொரோனா நோய் தொற்று பரவல் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைக்கு போதிய கையிருப்பு இல்லாத காரணத்தால் 1500 லிட்டர் வாங்கி வழங்கிடவும் துப்புரவு ஆய்வாளர்கள் குறிப்பு கொடுத்துள்ளனர்.

மேற்கண்ட பொருட்கள் வாங்கிக் கொள்ளவும் அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.16,00,000/- (ரூபாய் பதினாறு லட்சம் மட்டும்) பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **103, நாள்.24.06.2022** |
|---|---|
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண். 5)**

சட்டமன்ற பொது கணக்கு குழு **2021-22** ஆனது திண்டுக்கல் மாவட்டத்தில் **29.03.2022** முதல் **31.03.2022** வரை ஆய்வு பயணம் மேற்கொள்ள இருப்பதாக தெரிவித்து செயலாளர், தலைமைச் செயலகம் அவர்களின் கடிதம் எண். **1366/2022-9** தநாசமபேசெ(பொகசு.1), நாள். **11.03.2022** ல் தெரிவிக்கப்பட்டு, அதன்படி குழுவினரால் **29.03.2022** அன்று திண்டுக்கல் மாவட்டத்திற்கு வருகை புரிந்தது. மேலும், கொடைக்கானல் நகராட்சி பகுதியில் **30.3.2022** மற்றும் **31.03.2022** ஆகிய தேதிகளில் ஆய்வு மேற்கொள்ள குழு வருகை புரிந்தது. கொடைக்கானல் சேக் அப்துல்லா விருந்தினர் மாளிகை மராமத்து பணிகள் நடைபெற்று வருவதினால், குழு தங்குவதற்கு தேவையான ஏற்பாடுகள் மேற்கொள்ள திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து, கொடைக்கானல் நகரில் உள்ள தி கால்டன் உறாட்டலில் தங்கும் அறைகள், உணவுகள் மற்றும் சிற்றுண்டிகள் ஏற்பாடு செய்யப்பட்டது. **31.03.2022** அன்று நகராட்சியின் நகர்மன்ற கூட்ட அரங்கில் மாவட்ட ஆட்சியர், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மற்றும் துறை அலுவலர்களுடன் கூட்டம் நடத்தப்பட்டது. பொது கணக்கு குழு வந்து சென்ற வகையில் விடுதி கட்டணம், உணவு கட்டணம் மற்றும் சிற்றுண்டி கட்டணம் உட்பட செலவினத் தொகை ரூ. **3,35,946/-** வழஙக கோரி தங்கும் விடுதியின் பட்டியல் பெறப்பட்டுள்ளது. எனவே, பட்டியலின்படி, தொகை ரூ. **3,35,946/-**யை தி கால்டன் நிறுவனத்திற்கு வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு. செலவினத்தினை பொது நிதியில் இருந்து வழங்க மன்றம்அனுமதிக்கலாம்.

| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **104, நாள்.24.06.2022** |
|---|---|
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண். 6)**

கொடைக்கானல் நகராட்சி பொது சுகாதாரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சமுதாய மற்றும் பொதுக் கழிப்பறைகள் மற்றும் பொது மக்கள் அதிகம் கூடும் பகுதிகளாகிய புதிய பேருந்து நிலையம், மார்கெட், நட்சத்திர ஏரி பகுதிகளில் தொற்று நீக்கம் செய்யவும், குப்பை சேகரிக்கும் பெட்டிகளின் அருகில் துற்நாற்றம் எதுவும் வீசா வண்ணம் தடுக்கவும், இந்நகராட்சியில் லெமன் கிராஸ் (Lemon Grass) வேதிக்கலவை போதிய கையிருப்பு எதுவும் இல்லாத காரணத்தால் தற்போது மழைக்காலம் ஆரம்பிக்கப்பட்டு விட்டதால் மூன்று மாதத்திற்கு கையிருப்பு வைத்துக் கொள்ளும் அறவிற்கு 320 லிட்டர் அளவில் தேவை உள்ளதால் 320 லிட்டர் வாங்கி வழங்கிட துப்புரவு ஆய்வாளர்கள் குறிப்பு கொடுத்துள்ளனர்.

மேற்கண்ட லெமன் கிராஸ் ஆயில் வேதிக்கலவை 320 லிட்டர் அளவில் வாங்கிக் கொள்ளவும் அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.10,00,000/– (ரூபாய் பத்து லட்சம் மட்டும்) பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **105, நாள்.24.06.2022** |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண். 7)**

கொடைக்கானல் நகராட்சியின் 24 வார்டுகளிலும் சாலை ஓரஙகளில் உள்ள மண் மேடுகள், குப்பை கழிவுகளை அப்புறப்படுத்திட அனைத்து வார்டு உறுப்பினர்களிடம் இருந்து கோரிக்கை பெறப்பட்டுள்ளது. நகராட்சியில் சாலை ஓரங்களில் உள்ள மண் மேடுகளை அப்புறப்படுத்திட போதுமான இயந்திரங்கள் இல்லாத நிலையில் **1 JCB** மற்றும் டிராக்டர் ஒப்பந்தப்புள்ளி கோரி வாடகைக்கு அமர்த்திக் கொள்ளவும் அதற்கான செலவினத்தினை பொது நிதியின் மூலம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. இதற்காகும் உத்தேச செலவுத் தொகை ரூ. **9.92** இலட்சமாகும்.

அலுவலக குறிப்பு. அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **106, நாள்.24.06.2022** |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண். 8)**

கொடைக்கானல் நகராட்சி நகர்மன்றத் தலைவர் அவர்களின் அறைக்கு தேவையான தொலைக்காட்சி பெட்டி, தரை விரிப்பு, ஜன்னல் திரை , டம்ளர், Room Heater, Flask போன்ற பொருட்கள் உள்ளுர் கடைகளில் விலைப்புள்ளி பெற்று வாங்கிக் கொள்ளவும் அதற்கான செலவினத்தினை பொது நிதியின் மூலம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. இதற்காகும் உத்தேச செலவுத் தொகை ரூ. **94,000/–** ஆகும்.

அலுவலக குறிப்பு. அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **107, நாள்.24.06.2022** |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண். 9)**

கொடைக்கானல் நகராட்சி பகுதியில் உள்ள சாலை ஓர வியாரிகளின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்தும் பொருட்டு தேசிய நகர்பபுற வாழ்வாதார திட்டம் (Day–NULM) ன் மூலம் ஒப்பந்தப்புள்ளி கோரிய அறிவிப்பினை மாநில அளவிலான தமிழ் நாளிதழில் மற்றும் ஒரு ஆஙகில நாளிதழில் இயக்குநர், செய்தி மற்றும் மக்கள் தொடர்பு துறை, சென்னை மூலம் அறிவிப்பு செய்த வகையில் நாளிதழ் கட்டணமாக கீழ்க்கண்ட விவரப்படி பட்டியல் தொகை செலுத்த கோரி பட்டியல் பெறப்பட்டுள்ளது.

| வ. எண். | பணியின் விபரம் | விளம்பர நிறுவனத்தின் விபரம் | பட்டியல் எண் மற்றும் நாள் | தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | Supply and delivery of street vending cart for Vegetables and Fruits (76 Nos) | Accord Advertising Agencies, Chennai.<br><br>Times of India<br>Hindu Tamil Thisai | AAA/0029/22-23<br>Dated 24.4.2022 | **64260/–** |
| | Supply and delivery of street vending cart for Food items and Flower stalls (113 Nos) | | | |

மேற்கண்ட தொகையினை நாளிதழ் நிறுவனத்திற்கு பொது நிதியில் இருந்து வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு. அனுமதிக்கலாம். **(கோப்பு .ந.க.எண். 470/2022/இ1)**

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **108, நாள்.24.06.2022** |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண். 10)**

கொடைக்கானல் நகராட்சிக்கு உட்பட்ட 24 வார்டுகளிலும் சுற்றித் திரியும் தெரு நாய்களை கணக்கெடுப்பு பணி மேற்கொள்ளவும், கருத்தடை அறுவை சிகிச்சை மேற்கொண்டு தடுப்பூசி போடவும், அதற்கு தேவையான உபகரணங்கள் வாங்கிடவும் வேண்டியுள்ளது. ஏற்கனவே நகர்மன்றத் தீர்மானம் எண்.1138, நாள்.13.10.2021ல் கொடைக்கானல் கால்நடை பாதுகாப்பு அமைப்பு (KSPCA) மூலம் இப்பணி மேற்கொள்ளப்பட்டது. எனவே, 2022–23ம் ஆண்டிற்கான 24 வார்டுகளிலும் சுற்றி திரியும் தெரு நாய்களை கணக்கெடுப்பு பணி மேற்கொள்ளவும், ஓராண்டிற்கு கருத்தடை அறுவை சிகிச்சை மேற்கொண்டு தடுப்பூசி போடவும், அதற்கு தேவையான உபகரணங்கள் வாங்கிடவும், இதற்கான உத்தேச செலவுத் தொகை ரூ.3.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. இப்பணியினை கொடைக்கானல் கால்நடை பாதுகாப்பு அமைப்பு (KSPCA) மூலம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம். (ந.க.எண்.762/2022/எச்.1)

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **109, நாள்.24.06.2022** |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண். 11)**

கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண். 1 முதல் 24 வரை உள்ள சாலைகளில் வேகத்தடைகள் அமைத்தல் மற்றும் பிரதிபளிப்பான (Speed Breaker Stud) மற்றும் சாலையின் ஓரங்களில் வெள்ளை வண்ண கோடுகள் (Therma Plastic liner) அமைத்திட பொது நிதியின் மூலம் கீழ்க்கண்டவாறு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

| வ. எண். | பணியின் விபரம் | மதிப்பீட்டு தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | கொடைக்கானல் நகராட்சி வார்டு எண். 1 முதல் 24 வரை உள்ள சாலைகளில் வேகத்தடை அமைத்தல் | 9.98 |
| 2 | கொடைக்கானல் நகராட்சி வார்டு எண். 1 முதல் 24 வரை உள்ள சாலைகளில் வேகத்தடைகளுக்கு Stud மற்றும் Therma Plastic liner அமைத்தல் | 9.95 |

தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **110, நாள்.24.06.2022** |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

ஒம்/-பா.செல்லத்துரை,
**நகர்மன்றத் தலைவர்,**
**கொடைக்கானல் நகராட்சி.**

/ உண்மை நகல் /

ஆணையாளர்,
கொடைக்கானல் நகராட்சி.